**செய்தி வெளியீடு எண்: 731** **நாள்: 29.10.2019**

**செய்தி வெளியீடு**

## இந்தியாவிலேயே முதன்முறையாக விவசாயிகளின் வருமானம் பெருக தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டம், 2019 இயற்றப்பட்டது!

வேளாண் பெருமக்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பல்வேறு முக்கிய கொள்கை முடிவுகளை வகுத்துள்ளதோடு, புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது. இதனால், உணவுதானிய உற்பத்தியில், கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறு முறை நூறு லட்சம் மெட்ரிக் டன்களைக் கடந்து தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. இத்தகைய பல்வேறு சாதனைகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 5 முறை மத்திய அரசு வழங்கும் உயரிய விருதான கிருஷி கர்மான் விருதுகளை பெற்றுள்ளது. வேளாண் உற்பத்தி மட்டுமல்லாது, விளைபொருட்களின் விற்பனையிலும், தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கரும்பு, இறைச்சிக்கோழி, மூலிகைப் பயிர்கள் போன்ற இனங்களில் ஒப்பந்த சாகுபடி முறை, பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தபோதிலும், ஒப்பந்த சாகுபடியில் பங்கு பெறும் விவசாயிகளின் நலனை பாதுகாப்பதற்கான சட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. இதனை கருத்திற்கொண்டு, ஒப்பந்த சாகுபடி முறையில் ஈடுபடும் வேளாண் பெருமக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, கடந்த 2018–2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், *“விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கவும் ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தி முறைக்கு உரிய சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்”* என அறிவித்தது.

இந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) 2019க்கான சட்ட முன்வடிவை கடந்த 14.2.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் வைத்து, அதற்கான ஒப்புதல் பெறப்பட்டது. தமிழ்நாடு அரசு இயற்றிய இந்த சட்டத்திற்கு தற்போது மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. **அகில இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடி முறைக்கென்று, பிரத்யேகமாக எந்த சட்டமும் எந்த மாநிலத்திலும் இதுவரை இயற்றப்படாத நிலையில், தமிழ்நாடு அரசு தான் முதன்முதலில் தனிச் சட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது என்பது இதன் தனிச்சிறப்பாகும்.**

இந்த சட்டத்தின்படி, கொள்முதலாளர் அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் விவசாயிகள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தங்களது விளைபொருட்கள் அல்லது கால்நடைகள் அல்லது அதிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை, ஒப்பந்தம் செய்த அன்று நிர்ணயம் செய்த விலையிலேயே பரிமாற்றம் செய்வதற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் தமிழ்நாடு அரசு இச்சட்டத்தினை இயற்றியுள்ளது. இந்த ஒப்பந்தப் பண்ணையச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள கொள்முதலாளர் அந்தப்பகுதியைச் சார்ந்த வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினால் அனுமதிக்கப்பட்ட அலுவலரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், ஒப்பந்தப்பண்ணைய உற்பத்தியாளருடன் ஒப்பந்தத்தினை அலுவலர் முன்னிலையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒப்பந்த சாகுபடி முறையால் விவசாயிகளுக்கு பல நன்மைகள் உள்ளன. அதிக விளைச்சல் காரணமாக, விலை வீழ்ச்சி ஏற்படும் நேரங்களில், விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகின்றனர். மாண்புமிகு அம்மாவின் அரசு அறிமுகப்படுத்தியுள்ள இந்தச் சட்டத்தினால், விவசாயிகளுக்கு எந்த வித பொருள் மற்றும் பண இழப்பும் ஏற்படாமல், முன்னரே ஒப்பந்தம் செய்யப்பட்ட விலையில் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை உறுதி செய்யப்படுகிறது. வியாபாரிகளும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் அவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை, நல்ல தரத்தில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும். இதற்கான இடுபொருட்களையும், தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறவும் வாய்ப்புள்ளது. ஒப்பந்த பண்ணைய சாகுபடி முறையால் விவசாயிகளுக்கும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்குமிடையே நல்ல புரிதல் ஏற்படும். விதைப்பு காலத்திற்கு முன்னரே விளைபொருட்களின் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், அனைத்து தொழில் நுட்பங்களையும் பின்பற்றி, அதன் மூலம் விளைச்சல் அதிகரித்து, விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஈட்டிட வாய்ப்பு ஏற்படும்.

விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப் பண்ணையச் சட்டத்தில், கொள்முதலாளரோ அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனமோ ஒப்பந்த விதிகளை மீறும் போது, விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து, விவசாயிகளின் விளைபொருட்களுக்குரிய தொகையைப் பெற்றுத் தரும் வகையில், அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் இச்சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் ஏற்படும் இன்னல்களை வருவாய் கோட்ட அளவிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் களைந்திட அமைப்புகள் ஏற்படுத்தவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, மத்திய அரசு அல்லது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினால் தடைசெய்யப்பட்ட

எந்தவொரு விளைபொருட்களையும் இந்தச் சட்டத்தின் மூலம் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் ஒப்பந்தம் செய்ய இயலாது.

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனுக்காக, மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் இவ்வரசு வகுத்துள்ள இந்த ஒப்பந்தப் பண்ணையச் சட்டத்தினை விரைவில் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான சட்ட விதிகளை உடனடியாக வகுத்து, இச்சட்டத்தினை முழுச்செயலாக்கத்திற்கு கொண்டு வருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**